<u>நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி</u>

<u>நகர்மன்ற சாதாரணக்கூட்டம்</u>

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11ம் நாள் திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் நகர்மன்ற சாதாரணக் கூட்டம்.

நகராட்சி அலுவலகம்,
நந்திவரம்–கூடுவாஞ்சேரி
நாள். 11.04.2022

**நகர் மன்ற தலைவர்**
**நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி.**

---

பொருள் எண்.1

தமிழகஅரசால்அமைக்கப்பட்டசொத்துவரிசீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் எனஅரசிற்கு பரிந்துரைத்துள்ளது. 15வது மத்திய நிதி ஆணையம், 2022–2023 ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்து வரி விகிதம் (Floor rate i.e., Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிடவேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மைஇந்தியாதிட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகியதிட்டங்களுக்கு மானிய நிதி பெறவதற்கு சொத்துவரி/காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை (நிலை) எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை (நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்துவரி / காலி மனை வரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு பின் அரசாணை (நிலை) எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை, நாள்.19.11.2019 ன் படி சொத்துவரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்துவரி/காலிமனை வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும் இக்குழுவானது சொத்துவரி/ காலிமனை வரி சீராய்வு செய்வதற்கானபரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவுபணி வீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில், சொத்துவரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும், அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பல மடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித் தேவை, பொதுமக்களுக்கு வழங்கப்படவேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற் கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளின் கீழ்கண்டவாறு சொத்துவரி/ காலிமனை வரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்துவரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான கட்டடங்களுக்கு அவற்றில் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 3 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்துவரி/ காலிமனை வரி சீராய்வு செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சொத்துவரி/காலிமனைவரிசீராய்வுசெய்வதற்கானகுழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1 நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படைமதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சொத்துவரி:**

**குடியிருப்புகட்டடங்கள்(Residential Building) :**

| பரப்பளவு (ச.அடி) | உயர்வுசெய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601 – 1200 | 1.50 |
| 1201 – 1800 | 1.75 |
| >1800 | 2.00 |

**குடியிருப்புகட்டடங்களுக்கானமண்டலஅடிப்படைமதிப்பீடுகணக்கிடும் முறை:**

| | |
|---|---|
| 600 அடிவரை | ஏற்கனவேஉள்ளமண்டலமதிப்புX 1.25 |
| 601 அடிமுதல் 1200 அடிவரை | ஏற்கனவேஉள்ளமண்டலமதிப்புX 1.50 |
| 1201 அடிமுதல் 1800 அடிவரை | ஏற்கனவேஉள்ளமண்டலமதிப்புX 1.75 |
| 1800 அடிக்குமேல் | ஏற்கனவேஉள்ளமண்டலமதிப்புX 2.00 |

**குடியிருப்புஅல்லாதகட்டடங்கள் ( Non – Residential Building) :**

| வகைப்பாடு | உயர்வுசெய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிகபயன்பாட்டுகட்டடங்கள் | 2.00 |
| சுயநிதிபள்ளிமற்றும் கல்லூரிகட்டடங்கள் | 1.75 |

## குடியிருப்புஅல்லாதகட்டடங்களுக்கானமண்டலஅடிப்படைமதிப்பீடுகணக்கிடும் முறை

| | |
|---|---|
| தொழிற்சாலைபயன்பாடுகட்டடங்கள் | ஏற்கனவேஉள்ளமண்டலமதிப்புX 1.75 |
| வணிகபயன்பாட்டுகட்டடங்கள் | ஏற்கனவேஉள்ளமண்டலமதிப்புX 2.00 |
| சுயநிதிபள்ளிமற்றும் கல்லூரிகட்டடங்கள் | ஏற்கனவேஉள்ளமண்டலமதிப்புX 1.75 |

மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25%சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்

2) 601 முதல் 1200 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50%சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.

3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்து வரி உயர்வு செய்யப்பட வேண்டும்.

4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100%சொத்து வரி உயர்வு செய்யப்பட வேண்டும்.

5) வணிகப் பயன்பாட்டுகட்டடங்களுக்குதற்போதுள்ளசொத்துவரியில் 100%சொத்துவரிஉயர்வுசெய்யப்படவேண்டும்.

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.

## காலிமனைவரிசீராய்வு :

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படைமதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரி வதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்துவரியுடன் சேர்த்து காலிமனை வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

## தன்னிச்சையானவருடாந்திரசொத்துவரிசீராய்வு :–

ஏற்கனவே உள்ள சொத்துவரி/ காலிமனை வரியில், ஆண்டு தோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP)சராசரிவளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி/ காலிமனை வரி உயர்வு செய்து சொத்து வரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துக்கள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

இந்நகராட்சியினை பொறுத்தவரை மேற்தெரிவிக்கப்பட்டவாறு கட்டடங்கள் அமைந்துள்ள இடம் கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் 3 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு கீழ்கண்டவாறு மண்டல மதிப்பு இந்நகராட்சி நகரமன்ற தீர்மானம் எண்.117 நாள்.27.11.1998—ல் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

| மண்டலம் | 1 சதுரஅடிக்கு (ரூபாய்) |
|---|---|
| A | 1.00 |
| B | 0.80 |
| C | 0.50 |

இந்நகராட்சியில் மறுவரை செய்யப்பட்ட 30 வார்டு பகுதிகளில் அமைந்துள்ள தெருக்களில் அமைந்துள்ள கட்டடங்களுக்கு அதன் மண்டல மதிப்பிற்கேற்ப சொத்துவரி/காலிமனை வரி சீராய்வு மேற்கொள்ளலாம்.

விலைவாசி உயர்வு பணியாளர்களின் ஊதிய உயர்வு பொதுமக்களுக்கு செய்யவேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சிக்கு செலுத்திட வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920, பிரிவு 81—A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1 நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், இந்நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்துவரி/காலிமனை வரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

இந்நகராட்சியில் வார்டு மறுசீரமைப்பு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் வார்டு வாரியான தெருவிவரங்கள் அதற்குண்டான தற்போதைய மண்டல விவரங்கள் கீழ்கண்டவாறு வழங்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | தெருவின் பெயர் | ஏற்கனவேநடைமுறை யில்உள்ளமண்டலம் | புதியமண்டலம் |
|---|---|---|---|---|
| 1 | 1 | அருள்நகர் | B | B |
| 2 | 1 | ஜெகதீஷ்நகர் | — | B |
| 3 | 1 | எம்.ஜி.நகர் | B | B |
| 4 | 1 | எம்.ஜி.நகர் பிரிவு—1 | B | B |
| 5 | 1 | மீனாட்சிநகர் | B | B |
| 6 | 1 | கல்பனாசாவ்லாதெரு | — | B |
| 7 | 2 | ஸ்டெர்லிங் அடுக்ககம் | — | B |
| 8 | 2 | யமுனாநகர் | B | B |
| 9 | 2 | ஸ்ரீ ராகவேந்திராநகர் | — | B |

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | 2 | லட்சுமிநகர் | B | B |
| 11 | 2 | விவேகானந்தாநகர் | – | B |
| 12 | 2 | பிரியாநகர்–2 | B | B |
| 13 | 2 | பிரபுஅவின்யூ | – | B |
| 14 | 2 | சரஸ்வதிநகர் | – | B |
| 15 | 2 | பாலாஜிநகர் | B | B |
| 16 | 3 | வைகுண்டம் பிளாட்ஸ் | – | A |
| 17 | 3 | வெங்கடேஸ்வராநகர் | – | B |
| 18 | 3 | ஓம்சக்திநகர் | B | B |
| 19 | 3 | என்.சி.கே அவின்யூ | – | B |
| 20 | 3 | வீரபாகுநகர் | B | B |
| 21 | 3 | துலுக்கானத்தம்மன்கோயில்தெரு | C | C |
| 22 | 3 | பஜனைக்கோயில் 1வது தெரு | C | C |
| 23 | 3 | பஜனைக்கோயில் 2வது தெரு | C | C |
| 24 | 3 | ராமலிங்கம் தெரு | C | C |
| 25 | 3 | ஜெயராம்நகர் | – | B |
| 26 | 4 | அக்ஷயாஅடுக்ககம் | – | A |
| 27 | 4 | பாலாஜிஅவின்யூ | B | B |
| 28 | 4 | விஸ்வநாதபுரம் 1வது தெரு | B | B |
| 29 | 4 | விஸ்வநாதபுரம் 2வது தெரு | B | B |
| 30 | 4 | எழில்அவின்யூ | – | B |
| 31 | 5 | சபாஅடுக்ககம் | – | A |
| 32 | 5 | மகாலட்சுமிநகர் | B | B |
| 33 | 6 | உதயசூரியன் நகர் | B | B |
| 34 | 6 | அமுதம்காலனி | B | B |
| 35 | 6 | ராதாகிருஷ்ணன் நகர் | – | B |
| 36 | 6 | ஜெயலட்சுமிநகர் | B | B |
| 37 | 6 | ஐஸ்வர்யாநகர் | B | B |
| 38 | 6 | சிவாஅவின்யூ | – | A |
| 39 | 6 | ஸ்ரீராம் நகர் | B | A |
| 40 | 6 | அபேஅவின்யூ | – | A |
| 41 | 6 | ஸ்ரீ கணேஷ்நகர் | – | A |
| 42 | 6 | சதாசிவம் நகர் | B | A |
| 43 | 7 | என்.பி.ஆர் நகர் | B | A |
| 44 | 7 | ஆதிபராசக்திநகர் | B | A |
| 45 | 7 | ஜி.எஸ்.டிரோடு | A | A |
| 46 | 7 | லட்சுமிநகர் | B | A |
| 47 | 7 | தர்மபிள்ளைதோட்டம் | – | A |
| 48 | 7 | வேதகிரிநகர் | – | B |
| 49 | 7 | கற்பகாம்பாள்நகர் | B | B |
| 50 | 7 | நந்தீஸ்வரர் நகர் | B | B |

| | | | | |
|---|---|---|---|---|
| 51 | 7 | நந்தீஸ்வரர் அவின்யூ | – | B |
| 52 | 7 | கற்பகாம்பாள்நகர் 2வது குறுக்கு தெரு | B | B |
| 53 | 7 | ஆதிபராசக்திநகர் விரிவு | – | B |
| 54 | 7 | கற்பகாம்பாள்நகர் விரிவு | B | B |
| 55 | 7 | கற்பகாம்பாள்நகர் 3வது குறுக்கு தெரு | B | B |
| 56 | 7 | கற்பகாம்பாள்நகர் அவின்யூ | B | B |
| 57 | 7 | செல்வராஜ் நகர் | – | B |
| 58 | 7 | வெங்கடேஸ்வராநகர் | – | B |
| 59 | 7 | வேதகிரிநகர் | – | B |
| 60 | 8 | கணபதிநகர் விரிவு–2 | B | B |
| 61 | 8 | கணபதிநகர் | B | B |
| 62 | 8 | கணேஷ்நகர் | B | B |
| 63 | 8 | கற்பகாம்பாள்நகர் | B | B |
| 64 | 8 | ஸ்ரீவாரிநகர் | – | B |
| 65 | 8 | வள்ளலார் நகர் | B | B |
| 66 | 8 | கன்னியப்பாநகர் | B | B |
| 67 | 8 | காமாட்சிநகர் | B | B |
| 68 | 8 | நவீன்சதீஷ்நகர் | – | B |
| 69 | 8 | பிரியாநகர் | B | B |
| 70 | 8 | திருமலைநகர் | B | B |
| 71 | 8 | பத்மாவதிநகர் | B | B |
| 72 | 8 | பத்மினிபிளாட்ஸ் | – | B |
| 73 | 9 | ஆர்.வி.நகர் | – | B |
| 74 | 9 | சங்கர் கணேஷ்நகர் | B | B |
| 75 | 9 | சிங்காரம் நகர் | – | B |
| 76 | 9 | எம்.ஜி.ஆர் நகர் | B | B |
| 77 | 9 | மோகனப்பிரியாநகர் | B | B |
| 78 | 9 | கே.ஜே.நகர் | – | B |
| 79 | 9 | சிற்பி நகர் | B | B |
| 80 | 9 | எல்லப்பாஅவின்யூ | – | B |
| 81 | 9 | சண்முகம் நகர் | – | B |
| 82 | 9 | எம்.கே.நகர் | – | B |
| 83 | 9 | பி.ஆர்.விநகர் | – | B |
| 84 | 10 | பாரதியார் தெரு | B | B |
| 85 | 10 | மணிமேகலைதெரு | B | B |
| 86 | 10 | செங்குட்டுவன் தெரு | B | B |
| 87 | 10 | திரு.வி.கதெரு | B | B |
| 88 | 10 | திருவள்ளுவர் தெரு | B | B |
| 89 | 10 | ஔவையார் தெரு | B | B |
| 90 | 10 | மசூதிதெரு | A | A |

| | | | | |
|---|---|---|---|---|
| 91 | 10 | காந்திதெரு | A | A |
| 92 | 10 | ஜி.எஸ்.டிசாலைமேற்குபக்கம் | A | A |
| 93 | 11 | ஜெய்பீம் நகர் | C | C |
| 94 | 11 | நந்கீஸ்வரர்காலனி 1வது தெரு | B | B |
| 95 | 11 | நந்கீஸ்வரர்காலனி 2வது தெரு | B | B |
| 96 | 11 | நந்கீஸ்வரர்காலனி 3வது தெரு | B | B |
| 97 | 11 | நந்தீஸ்வரர்காலனிகுளக்கரைதெரு | C | C |
| 98 | 11 | புதுப்பாளையத்தம்மன்கோயில் தெரு | C | C |
| 99 | 11 | இலுப்பாதோப்பு | C | C |
| 100 | 11 | இருளர்குடியிருப்பு | – | C |
| 101 | 11 | ஜிஎஸ்டிசாலை | A | A |
| 102 | 12 | மகாலட்சுமிநகர்விரிவாக்கம், 2 முதல் 7 தெருக்கள் | B | A |
| 103 | 12 | அந்தோணிகுடியிருப்பு | – | A |
| 104 | 12 | ஐஸ்வர்யாநகர் | B | A |
| 105 | 12 | கிருஷ்ணவேணிநகர் | – | A |
| 106 | 12 | சாய்கணேஷ்நகர் | – | A |
| 107 | 12 | சத்யசாய்நகர் | – | A |
| 108 | 12 | அம்பாள்நகர் | – | B |
| 109 | 13 | அம்சாநகர் | B | B |
| 110 | 13 | மல்லீஸ்வரன்கோயில்தெரு | C | C |
| 111 | 13 | பெரியதெரு | B | B |
| 112 | 13 | கெங்குசாமிநாயுடுபள்ளிதெரு | – | B |
| 113 | 13 | பெரியதெரு 2வதுதெரு | B | B |
| 114 | 13 | பிராமினார்தெரு | B | B |
| 115 | 13 | செங்கேணியம்மன்கோயில்தெரு | B | B |
| 116 | 14 | குபேரன்நகர் 1வதுதெரு | A | A |
| 117 | 14 | குபேரன்நகர் 2வதுதெரு | A | A |
| 118 | 14 | பிள்ளையார்கோயில்தெரு | C | C |
| 119 | 14 | காமராஜபுரம் 1வதுதெரு | B | B |
| 120 | 14 | காமராஜபுரம் 3வது, 4வதுமற்றும் 6வதுகுறுக்குத்தெரு | B | B |
| 121 | 14 | போலீஸ்குடியிருப்பு 1& 2 | – | B |
| 122 | 14 | காமராஜபுரம்குறுக்குத்தெரு | B | B |
| 123 | 14 | நெல்லிக்குப்பம்சாலைபகுதி | A | A |
| 124 | 14 | தங்கல்சாலை | C | C |
| 125 | 15 | காமராஜர்தெரு | A | A |
| 126 | 15 | பெரியார்ராமசாமிதெருபகுதி | B | B |
| 127 | 15 | ஜாகிர்உசைன்தெரு&குறுக்குத்தெரு | B | B |

| | | | | |
|---|---|---|---|---|
| 128 | 15 | ஜிஎஸ்டிசாலை (மேற்குபகுதி) | A | A |
| 129 | 16 | கண்ணகிதெரு | B | B |
| 130 | 16 | நடராஜநாயக்கர்தெரு | B | B |
| 131 | 16 | அப்துல்லாதெரு | B | B |
| 132 | 16 | அறிஞர்அண்ணாதெரு | A | A |
| 133 | 16 | ரெயில்வேகுவார்ட்டர்ஸ் | – | A |
| 134 | 16 | பெரியார்ராமசாமிதெருபகுதி | B | B |
| 135 | 16 | குப்புசாமிநாயக்கர்தெரு | B | B |
| 136 | 17 | திரௌபதிஅம்மன்கோயில்தெரு | B | B |
| 137 | 17 | சின்னகுளக்கரைதெரு | C | C |
| 138 | 17 | தேரடிமெட்டுதெரு | C | C |
| 139 | 17 | ராணிஅண்ணாநகர்மெயின்ரோடு | B | B |
| 140 | 17 | ராணிஅண்ணாநகர் 1வதுதெரு | B | B |
| 141 | 17 | ராணிஅண்ணாநகர் 2வதுதெரு | B | B |
| 142 | 17 | ராணிஅண்ணாநகர் 3வதுதெரு | B | B |
| 143 | 17 | பெரியகுளக்கரைதெரு | C | C |
| 144 | 17 | நங்கூரம்நகர் | B | B |
| 145 | 18 | நந்திவரம்மெயின்ரோடு | – | C |
| 146 | 18 | நந்திவரம்காலனி 2வதுதெரு | – | C |
| 147 | 18 | பஜனைகோயில்தெரு | C | C |
| 148 | 18 | பள்ளிதெரு | C | C |
| 149 | 18 | நந்திவரம்காலனி 1வதுதெரு | – | C |
| 150 | 18 | மீனாட்சிநகர் | B | B |
| 151 | 18 | செங்கேனியம்மன்கோயில்தெரு | C | C |
| 152 | 18 | நாராயணபுரம் | B | B |
| 153 | 19 | முத்துமாரியம்மன்கோயில்தெரு | C | C |
| 154 | 19 | வள்ளுவர்காலனி | C | C |
| 155 | 19 | காமராஜர்தெரு | C | C |
| 156 | 19 | திருவள்ளுவர்தெரு | C | C |
| 157 | 19 | மாவீரன்நேதாஜிதெரு | C | C |
| 158 | 19 | ராஜீவ்காந்திநகர் | – | C |
| 159 | 19 | சர்ச்ரோடு | B | B |
| 160 | 19 | பிள்ளையார்கோயில்செயின்ட் | C | C |
| 161 | 19 | லட்சுமிநகர்மெயின்ரோடு | B | B |
| 162 | 19 | துலுகானத்தம்மன்கோயில்எஸ்.டி | C | C |
| 163 | 19 | நெல்லிக்குப்பம்சாலை (பகுதி) | A | A |
| 164 | 20 | திருவீதியம்மன்கோயில்தெரு | C | C |
| 165 | 20 | கிருஷ்ணாபுரம் 1வதுதெரு | B | B |
| 166 | 20 | கிருஷ்ணாபுரம் 2வதுதெரு | B | B |
| 167 | 20 | கிருஷ்ணாபுரம் 3வதுதெரு | B | B |
| 168 | 20 | திருக்குமரன்தெரு | B | B |

| | | | | |
|---|---|---|---|---|
| 169 | 20 | மரகதம்சந்திரசேகர்தெரு | C | C |
| 170 | 20 | லட்சுமிகார்டன் | – | B |
| 171 | 21 | முத்துமாரியம்மன்கோயில்தெரு | C | C |
| 172 | 21 | பாரிதெரு | C | C |
| 173 | 21 | பயணிகள்பங்களாபின்புறம் | – | B |
| 174 | 21 | NSK தெரு | C | C |
| 175 | 21 | டிஃபென்ஸ்காலனி 1முதல் 9வதுதெருக்கள் | B | B |
| 176 | 21 | தோட்டம்அவென்யூ | B | B |
| 177 | 21 | நடராஜபுரம் | B | B |
| 178 | 22 | காந்திநகர் 1வதுதெரு | B | B |
| 179 | 22 | காந்திநகர் 2வதுதெரு | B | B |
| 180 | 22 | காந்திநகர் 3வதுதெரு | B | B |
| 181 | 22 | நெல்லிக்குப்பம்சாலை | A | A |
| 182 | 23 | வேதாத்திரிகாலனி | B | B |
| 183 | 23 | ஈவிகேசம்பத்தெரு | B | B |
| 184 | 23 | VOC தெரு | B | B |
| 185 | 23 | நக்கீரன்தெரு | B | B |
| 186 | 23 | பலராமன்தெரு | B | B |
| 187 | 23 | சாமிநாதநாயக்கர்தெரு | B | B |
| 188 | 23 | வேதாந்தமாரியம்மன்கோயில்தெரு | – | B |
| 189 | 23 | பாலாஜிதெரு | B | B |
| 190 | 23 | மகாலட்சுமிதெரு | B | B |
| 191 | 23 | தேவராஜ்நாயக்கர்தெரு | B | B |
| 192 | 23 | டவர்தெரு | – | B |
| 193 | 24 | கம்பர்தெரு | B | B |
| 194 | 24 | பாரதிதாசன்தெரு | B | B |
| 195 | 24 | பூங்காதெரு | B | B |
| 196 | 24 | திருப்பூர்குமரன்தெரு | B | B |
| 197 | 24 | லால்பகதூர்சாஸ்திரி | B | B |
| 198 | 24 | என்ஜிஓநகர் | – | B |
| 199 | 24 | ராஜாஜிதெரு | B | B |
| 200 | 24 | வேணுகோபால்தெரு | B | B |
| 201 | 25 | ஜிஎஸ்டிசாலைமேற்கு | A | A |
| 202 | 25 | சக்கரபாணிதெரு | B | B |
| 203 | 25 | குப்புசாமிபிள்ளைதெரு | B | B |
| 204 | 25 | சாரதிதெரு | B | B |
| 205 | 25 | திருநாவுக்கரசுதெரு | – | B |
| 206 | 25 | ராமதாஸ்தெரு | – | B |
| 207 | 25 | ஜேசுபாதம்நகர் | – | B |

| | | | | |
|---|---|---|---|---|
| 208 | 25 | அச்சுதாஸ்தெரு | B | B |
| 209 | 26 | ராதாகிருஷ்ணன்தெரு | B | B |
| 210 | 26 | மீனாட்சிநகர் | B | B |
| 211 | 26 | நேதாஜிதெரு | – | B |
| 212 | 26 | நேருதெரு | – | B |
| 213 | 26 | இந்திராகாந்திநகர் | – | B |
| 214 | 26 | ஓமியோபாபாதெரு | – | B |
| 215 | 26 | ஜிஎஸ்டிசாலைமேற்கு | A | A |
| 216 | 26 | செல்லப்பாநகர் | B | B |
| 217 | 26 | ஏரிக்கரைதெரு | – | C |
| 218 | 27 | விஸ்வேஸ்வரய்யர்தெரு | B | B |
| 219 | 27 | ராமுதெரு | B | B |
| 220 | 27 | கே.கே.நகர் 1வதுதெரு | B | B |
| 221 | 27 | கே.கே.நகர் 2வதுதெரு | B | B |
| 222 | 27 | கே.கே.நகர் 2வதுமெயின்ரோடு | B | B |
| 223 | 27 | கே.கே.நகர் 3வதுமெயின்ரோடு | B | B |
| 224 | 27 | கே.கே.நகர் 1 முதல் 11வதுகுறுக்குத்தெரு | B | B |
| 225 | 27 | கே.கே.நகர் 8வதுமெயின்ரோடு | B | B |
| 226 | 27 | கணபதிபுரம் | – | B |
| 227 | 27 | ஜிஎஸ்டிசாலைகிழக்குபகுதி | A | A |
| 228 | 28 | ஒத்தவாடைதெரு | – | B |
| 229 | 28 | எல்லைகாந்திதெரு | – | B |
| 230 | 28 | அவ்வையார்தெரு | B | B |
| 231 | 28 | கம்பர்தெரு | B | B |
| 232 | 28 | திருவள்ளுவர்தெரு | B | B |
| 233 | 28 | தேவிகருமாரிஅம்மன்கோயில்தெரு | – | B |
| 234 | 28 | முத்தமிழ்தெரு | B | B |
| 235 | 28 | குமரன்நகர் | B | B |
| 236 | 28 | தர்மராஜ்தெரு | B | B |
| 237 | 28 | நேதாஜிதெரு | B | B |
| 238 | 29 | மணிகண்டபுரம் | – | B |
| 239 | 29 | எல்.ஆர்அவென்யூ | – | B |
| 240 | 29 | எழில்நகர் | – | B |
| 241 | 29 | பங்கஜம்மாள்நகர் | – | B |
| 242 | 29 | பவானிபுரம் | – | B |
| 243 | 29 | கோவிந்தராஜபுரம் | B | B |
| 244 | 29 | நெல்லிக்குப்பம்சாலைபகுதி | A | A |
| 245 | 29 | பத்மாவதிநகர் | B | B |
| 246 | 29 | ஏ.எல்.எஸ்அவென்யூ | – | B |

| | | | | |
|---|---|---|---|---|
| 247 | 29 | வள்ளிநகர் | B | B |
| 248 | 29 | பகவதிநகர் | B | B |
| 249 | 30 | உஷாநகர் | – | B |
| 250 | 30 | ஓம்சக்திநகர் | B | B |
| 251 | 30 | ஓம்சக்திஅவென்யூ | B | B |
| 252 | 30 | காமேஸ்வரிநகர் | B | B |
| 253 | 30 | பரமேஸ்வரிநகர் | B | B |
| 254 | 30 | கௌஷியாகாலனி | – | B |
| 255 | 30 | பாரத்அவென்யூ | – | B |
| 256 | 30 | ராதாநகர் | – | B |
| 257 | 30 | பெரியார்நகர் | C | C |
| 258 | 30 | நெல்லிக்குப்பம்சாலைபகுதி | A | A |

## <u>கட்டிடங்களுக்குசொத்துவரிவிதிப்புசெய்திடபுதியஅடிப்படைமதிப்புகணக்கீடு</u>

| வ. எண் | தற்போதயமண்டலம் | பழையநகரமன்றதீர்மானம் எண்.117நாள். 27.11.1998ன்படி அடிப்படைமதிப்புஒருசதுரஅடிக்குமண்டலமதிப்பு | புதிதாகநிர்ணயிக்கப்படும் மண்டலமதிப்பு | | |
|---|---|---|---|---|---|
| | | | பரப்பளவு (ச.அடி) /உபயோகம் | உயர்வுசெய்வதற்கானகாரணி | புதியமண்டலமதிப்பு (ஒருச.அடிக்கு) |
| 1 | A | 1.00 | குடியிருப்பு | | |
| | | | <=600 | 1.25 | 1.25 |
| | | | 601–1200 | 1.50 | 1.50 |
| | | | 1201–1800 | 1.75 | 1.75 |
| | | | >1801 | 2 | 2.00 |
| | | | வணிகம் | 2 | 2.00 |
| | | | தொழிற்சாலை | 1.75 | 1.75 |
| | | | சுயநிதிபள்ளிமற்றும் கல்லூரிகட்டிடங்கள் | 1.75 | 1.75 |
| 2 | B | 0.80 | குடியிருப்பு | | |
| | | | <=600 | 1.25 | 1.00 |
| | | | 601–1200 | 1.50 | 1.20 |
| | | | 1201–1800 | 1.75 | 1.40 |
| | | | >1801 | 2 | 1.60 |
| | | | வணிகம் | 2 | 1.60 |
| | | | தொழிற்சாலை | 1.75 | 1.40 |
| | | | சுயநிதிபள்ளிமற்றும் கல்லூரிகட்டிடங்கள் | 1.75 | 1.40 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | C | 0.50 | குடியிருப்பு | | |
| | | | <=600 | 1.25 | 0.63 |
| | | | 601–1200 | 1.50 | 0.75 |
| | | | 1201–1800 | 1.75 | 0.88 |
| | | | >1801 | 2 | 1.00 |
| | | | வணிகம் | 2 | 1.00 |
| | | | தொழிற்சாலை | 1.75 | 0.88 |
| | | | சுயநிதிபள்ளிமற்றும் கல்லூரிகட்டிடங்கள் | 1.75 | 0.88 |

## கட்டிடங்களின் பயன்பாட்டிற்குஏற்றவாறுஅடிப்படைமதிப்பில்உயர்வுகணக்கீடு

1. குடியிருப்பு பயன்பாட்டு கட்டிடங்களுக்கு அடிப்படை மதிப்பில் உயர்வு இல்லை
2. தொழிற்சாலை பயன்பாட்டு கட்டிடங்களுக்கு அடிப்படை மதிப்பில் இரண்டு மடங்கு உயர்வு
3. வணிக பயன்பாட்டு கட்டிடங்களுக்கு அடிப்படை மதிப்பில் மூன்று மடங்கு உயர்வு
4. சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிங்களுக்கு அடிப்படை மதிப்பில் ஒன்றரை மடங்கு உயர்வு

## காலிமனைகளுக்குவரிவிதிப்புசெய்திட அடிப்படைமதிப்புகணக்கிடும் முறை:-

| வ. எண் | காலியிடம் அமைவிடத்தின் தன்மை | மண்டலம் (Zone) | நகர்மன்றதீர்மான எண்.90 நாள்.30.09.2009 ன் படி அடிப்படைமதிப்பு 1 சதுரஅடிக்குவிவரம் (பைசாவில்) | தற்போதுஅடிப்படைமதிப்பு 100 % உயர்வுசெய்து 1 சதுரஅடிக்குவிவரம் (பைசாவில்) |
|---|---|---|---|---|
| 1 | முக்கியமான மைய பகுதிகளில் குறிப்பாக ஜி.எஸ்.டி சாலை முழுவதும். | A | 30 | 60 |
| 2 | பிரதான சாலைகள் , பேருந்து செல்லும் சாலைகள். | B | 20 | 40 |
| 3 | குடியிருப்பு பகுதிகளில் உள்ள தெருக்கள். | C | 10 | 20 |

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
2) 601 முதல் 1200 சதுர அடிவரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்து வரி உயர்வு செய்யலாம்.

3) 1201 முதல் 1800 சதுர அடிவரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்து வரி உயர்வு செய்யலாம்

4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்து வரி உயர்வு செய்யலாம்

5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

7) காலிமனை வரிவிதிப்பிற்கு 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படைமதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.

8) ஏற்கனவே உள்ள சொத்துவரி/காலிமனை வரியில், ஆண்டு தோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி/காலிமனைவரி உயர்வு செய்து சொத்து வரி சீராய்வு மேற்கொள்ளலாம்.

ஏற்கனவே நடைமுறையில் உள்ளவாறு கட்டடத்தின் தன்மை, வயது, பயன்பாடு, தேய்மானம் ஆகியவை கருத்தில் கொள்ளப்பட்டு கட்டிடத்தின் பரப்பளவு மற்றும் காலிமனை பரப்பளவிகேற்ப சொத்துவரி/காலிமனை வரி நிர்ணயம் செய்யலாம்.

மேற்குறிப்பிட்டவாறு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1 நாள்.01.04.2022 ஆகியவற்றில் அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய வழங்கப்பட்ட தெளிவுரைகள் பின்பற்றி சொத்துவரி/ காலிமனை வரி சீராய்வு செய்யவும், தன்னிச்சையான வருடாந்திர சொத்து வரி சீராய்வு மேற்கொள்ளவும், அரசாணை மற்றும் சுற்றறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

மேலும் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு மறு வரையரை செய்யப்பட்ட 30 வார்டுகளில் ஏற்கனவே அமைந்துள்ள மற்றும் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்களுக்கு பட்டியலில் கண்டவாறு மண்டலம் நிர்ணயம் செய்திடவும் மற்றும் ஏதேனும் சாலைகள், தெருக்கள் விடுபட்டு இருப்பின் அவற்றினை B மண்டலத்தில் நிர்ணயம் செய்திட மன்றத்தின் அனுமதிகோரப்படுகிறது.

## அலுவலக குறிப்பு :–

1) அரசாணை மற்றும் சுற்றறிக்கையினை மன்றம் பதிவுசெய்யலாம்.

2) மேற்படி அரசாணையின் வழிகாட்டுதலின்படி 01.04.2022 முதல் சொத்துவரி / காலிமனை வரி பொது சீராய்வு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு மறுவரையரை செய்யப்பட்ட 30 வார்டுகளில் ஏற்கனவே அமைந்துள்ள மற்றும் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்களுக்கு பட்டியலில் கண்டவாறு மண்டலம் நிர்ணயம் செய்திடவும் மற்றும் ஏதேனும் சாலைகள், தெருக்கள் விடுபட்டு இருப்பின் அவற்றினை B மண்டலத்தில் நிர்ணயம் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.26**

அரசு வழிகாட்டுதலின்படி மற்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**பொருள் எண் : 2**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி – பொதுப்பயன்பாடு – இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2022–23–ல் அறிவுசார் நூலகம் (Knowledge Centre) அமைக்கும் பணிக்காக ரூ.200/இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (NS) அரசாணை (MS) எண்.92 நாள்: 30.10.2021–ல் தெரிவித்துள்ளவாறு கட்டிடம் கட்டுவதற்கு ஏதுவாக காலி மனை இடமானது சர்வே எண்.601/3–ல் நெல்லிக்குப்பம் சாலையில் அமைந்துள்ள கால்நடை மருத்துவமனை கட்டுப்பாட்டில் 5 ஏக்கர் பரப்பளவில் உள்ள காலி இடத்தில் மேற்படி அறிவுசார் நூலகம் அமைக்க சுமார் 15000/ச.அடி என்ற அளவில் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் கட்டிடம் கட்டுவதற்கு தொடர் நடவடிக்கையாக பரிசீலனை செய்ததில் மேற்படி இடமானது ''அ'' பதிவேட்டில் சர்கார் புறம்போக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் அறிவுசார் நூலகம் கட்டுவதற்கும் இந்நகராட்சி பெயரில் இடமாற்றம் மற்றும் முன் நுழைவு அனுமதி வழங்கும் பொருட்டு வட்டாட்சியர், வண்டலூர் வட்டாட்சியர் அலுவலகம் அவர்களின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளவும், கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கவும் மன்றத்தின் ஒப்புதலுக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** கால்நடை துறையால் நீண்டகாலமாக பயன்படுத்தாமலும், பராமரிக்கப்படாமலும் பல சமூக விரோத செயல்கள் செய்யும் கூடாரமாக மாறியுள்ள மேற்காணும் காலி இடத்தில் கால்நடை மருந்தகம் இயங்கிவரும் பகுதியொட்டி 1 ஏக்கர் பரப்பளவில் கால்நடை துறை பயன்பாட்டிற்கு ஒதுக்கிவிட்டு மீதமுள்ள 4 ஏக்கர் பரப்பளவினை நகராட்சியில் புதியதாக அமைக்கப்படவுள்ள அறிவுசார் நூலகம் அமைக்கவும், மீதமுள்ள இடத்தினை இந்நகராட்சி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான விளையாட்டு மைதானம் அமைத்திடவும் தேவையான நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.27**

உரிய வழிமுறைகளுடன் அறிவுசார் நூலகம் , விலையாட்டு மைதானம் கட்டுவதற்கு மன்றம் ஒப்புதல் வழங்கப்படுகிறது.

**பொருள் எண் : 3**

இந்நகராட்சியில் 2022–23ம் நிதியாண்டிற்கான நிர்வாக பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால், அதற்கு தேவைப்படும் எழுது பொருட்கள், படிவங்கள், பதிவேடுகள் மற்றும் பாரங்கள் அவசியம் காரணமாக தேவைப்படுகிறது. மேலும் தற்போது சொத்துவரி பொது சீராய்வு செய்யும் பணிகள் நடைபெற்று வரும் நிலையில் 30 வார்டுகளில் கள ஆய்வு செய்து அளவீடு செய்யப்பட்டு வரும் நிலையில் இப்பணிகளுக்கு தேவையான கீழ்காணும் எழுது பொருட்களை வாங்கி வழங்கிட கோரி இந்நகராட்சியின் இளநிலை உதவியாளர் தனது குறிப்பில் தெரிவித்துள்ளார்.

எனவே இந்நகராட்சியின் அன்றாட அலுவலக பணிகளுக்கு தேவையான எழுது பொருட்களை கொள்முதல் செய்யவும், மற்றும் அலுவலக பயன்பாடு இதர பொருட்கள் வாங்கிட இதற்கான தோராய செலவினம் ரூ.9.80/– மற்றும் கொள்முதல் செய்யும் பொருட்களின் விவரம் கீழ்கண்டுள்ளவாறு அட்டவணைப்படுத்தப்படுகிறது.

| வ. எண். | விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | Birth Declare Form | 20 Pad |
| 2 | குற்ற வழக்கு தொடர்பு அறிவிப்பு | 10 Books |
| 3 | ஜப்தி நோட்டீஸ் | 20 Books |

| | | |
|---|---|---|
| 4 | இறுதி அறிவிப்பு நோட்டீஸ் | 20 Books |
| 5 | காலி மனை வரிவிதிப்பு விண்ணப்பம் | 20 Pad |
| 6 | சொத்துவரி பெயர் மாற்றம் விண்ணப்பம் | 20Pad |
| 7 | சொத்துவரி விதிக்கக் கோரும் விண்ணப்பம் | 20Pad |
| 8 | Lands / Building Application Form | 20Pad |
| 9 | சொத்துவரி நிர்ணயம் செய்ய விண்ணப்பம் | 10Pad |
| 10 | Extimate & Allotment Register | 2 Nos |
| 11 | Road Register | 3 Nos |
| 12 | Cash Book 100P | 2 Nos |
| 13 | Contractor Register | 2 Nos |
| 14 | Journal Voucher | 1 Pad |
| 15 | Tools & Plants Register | 1 No |
| 16 | Minute Book Leather | 3 Nos |
| 17 | Water Supply Complain Register | 1 No |
| 18 | Street Light Complain Register | 1 No |
| 19 | Public health Complain Register | 1 No |
| 20 | Pink Colour Paper | 5 Ream |
| 21 | Yellow colour paper A4 | 2 Ream |
| 22 | Brown wrapper sheet with name | 1000 Nos |
| 23 | Colour wrapper sheet with name | 600 Nos |
| 24 | Triplicate challan with name | 20 Pad |
| 25 | 2 Quire Register | 30 Nos |
| 26 | File pad urgent / Ordinary | 500 Nos |
| 27 | Thapal Pad | 5 Nos |
| 28 | A4 Copies paper | 150 Ream |
| 29 | Flap Sticker | 24 Packet |
| 30 | Highlighter pen | 10 Nos |
| 31 | Paper weight glass | 10 Nos |
| 32 | Brown tape 2 inch | 5 Nos |
| 33 | Photo sticker board | 5 Packet |
| 34 | Stamp Pad large | 5 |
| 35 | Ball point pen | 5 Packet |
| 36 | Pencil | 5 box |
| 37 | Steel Scale | 10 Nos |
| 38 | Plastic Scale | 10 Nos |
| 39 | Canon 303 Cartridge | 10 Nos |
| 40 | HP 104A Toner | 10 Nos |
| 41 | Canon NPG84 | 2 Nos |
| 42 | A3 Copier Paper | 3 Nos |
| 43 | பேருந்து நிலைய இரசீது புத்தகம் | 200 Nos |

மேற்கண்ட வ.எண்.01 முதல் 43 வரை உள்ள எழுது பொருட்கள் பொது அலுவலக பயன்பாட்டின் அவசியம் கருதி மன்றப்பொருள் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.28**

வரிசை எண்.1 முதல் 43 வரை உள்ள பொருட்கள் வாங்க மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**பொருள் எண் : 4**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி – பொது பயன்பாடு – இந்நகராட்சியில் பல்வேறு வகையான குத்தகை இனங்கள் வாடகை அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகின்றது. இதன் அடிப்படையில் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21–ல் செயல்பாட்டில் உள்ள சமுதாய கூடம் APMT திட்டம் 2009–10ம் நிதியாண்டில் கட்டப்பட்டு பொதுமக்களின் நிகழ்ச்சிகளுக்கு வாடகை விடப்பட்டு வருகின்றது. இந்நிலையில் உள்ளாட்சி நிதி தணிக்கையில் வாடகை நிர்ணயம் மற்றும் மின்சார அளவீடு குறித்து மன்ற ஒப்புதல் ஏதும் இல்லை என்ற குறைபாடு தணிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே அரசு விதிமுறைகளின்படி வாடகை மற்றும் மின்சார அளவீடு கட்டணம் நிர்ணயம் மற்றும் இச்சமுதாய கூடத்தில் மின் பணிகள் மேற்கொள்ளுதல், பிளம்பிங் வேலை, வர்ணம் பூசுதல் மற்றும் இதர புணரமைப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்காணும் புணரமைப்பு பணிகளுக்கு ஆகும் தோராய செலவினம் ரூ.9.80 /இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.29**

மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**பொருள் எண் : 5**

நந்திவரம் –கூடுவாஞ்சேரி நகராட்சி – வருவாய் பிரிவு – சொத்துவரி சீராய்வு குறித்து 15வது மத்திய நிதி ஆணையம் 2022–23 முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியம் பெறுவதற்க்கு மொத்த ஆண்டு மதிப்பில் சொத்து வரி விகிதம் (Floor Rate i,e– Rate of Taxation ) எவ்வளவு என அறிக்கை வெளியிட வேண்டும் என தெரிவிக்கப்பட்டு அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் : 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1 – நாள்: 01.04.2022 ஆகியவற்றில் அடிப்படை மதிப்பு சதுர அடி கணக்கில் நிர்ணயம் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிகளின் அடிப்படையில் நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட மொத்தம் 30/வார்டுகளில் உள்ள குடியிருப்புகள், தொழிற்சாலைகள், வணிக பயன்பாடுகள், சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரிகள் இனங்களை கண்டறிந்து சொத்துவரி குறித்தான உண்மை தன்மையினை கண்டறிந்து பணிகள் மேற்கொள்ள படிவங்கள், பாரங்கள், சொத்து வரி சீராய்வு குறித்த நாளிதழ் விளம்பர செலவு, நோட்டீஸ், சொத்துவரி நகலேடு மற்றும் இதர தேவைப்படும் எழுது பொருள் கொள்முதல் செய்திட ஆகும் தோராய செலவினம் ரூ.4.50/ இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.30**

மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**பொருள் எண் : 6**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சியில் **2021–2022ம்** ஆண்டு பொதுநிதிப்பணிகள் சாலை, சிறுபாலங்கள் மற்றும் பிரதான விநியோக குடிநீர் குழாய் மாற்றுதல் பணிகள் செய்ய இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் நாள் **16.03.2022ன்** படி ஒப்பந்தப்புள்ளி **01.04.2022** அன்று கோரியதில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் | ஒப்பந்த சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | 13 வது வார்டு தேரடி மேட்டு தெரு தார்சாலை அமைத்தல் | 9.98 | 1.L.வெங்கடேசன்<br>2.L.புண்ணியகோட்டி | 0.11%குறைவு<br>4.90%அதிகம் |
| 2 | 13வது வார்டு தேரடி மேட்டு தெரு சிறுபாலங்கள் அமைத்தல் | 3.80 | 1.L.வெங்கடேசன்<br>2.L.புண்ணியகோட்டி | 0.07%குறைவு<br>3.86%அதிகம் |
| 3 | டிபன்ஸ் காலனி முதல் நெல்லிக்குப்பம் சாலை வரை பிரதான விநியோக குடிநீர் குழாய் மாற்றுதல் பணி | 8.25 | 1.குமரன் எலக்ட்ரிகல்ஸ்<br>2. L.வெங்கடேசன் | 0.15%குறைவு<br>4.25%அதிகம் |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணியாணை நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.31**

குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்தங்கள் வ.எண்.1 முதல் 3 வரை உள்ள பணிகளுக்கு மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**பொருள் எண் : 7**

**பார்வை :** கோட்ட பொறியாளர் (நெ) (கூ/பொ) திட்டங்கள் கோட்டம் செங்கல்பட்டு அவர்களின் கடித எண் – 345/LC40 / 2019/இவஅ1 – நாள். 08.04.2022

பார்வையில் கண்ட கடிதத்தில் நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட இரயில்வே கடவு எண்.40 க்கு மாற்றாக கூடுவாஞ்சேரி இரயில் நிலையம் அருகில் கூடுவாஞ்சேரி – மாடம்பாக்கம் சாலையில் மேம்பாலம் கட்டும் பணிக்கு இரயில்வே கி.மீ.40/ 1–2 வண்டலூர்– கூடுவாஞ்சேரி இரயில் நிலையங்களுக்கு இடையே உள்ள சுரங்கப்பாதையில் பொதுப்பணித்துறை (மின் துறை) மூலம் மின் விளக்குகள் அமைக்கும் பணி மேற்கொண்டு தற்போது முடிவடைந்துள்ளதால் பராமரிப்பு பணிகள் நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி

மூலம் மேற்கொள்ளவும் அதற்க்கான புதிய மின் இணைப்பினை ஆணையாளர் நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி பெயரில் பதிவு செய்திட கடிதம் வரப்பெற்றுள்ளது.

எனவே ஆணையாளர் நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி என்ற பெயரில் புதிய மின் இணைப்பு பெற்று மின் விளக்குகள் உள்ள பகுதியினை இந்நகராட்சி மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ. கு :** பணியின் அவசியம் கருதியும் , பொது நலன் கருதியும் நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.32**

பொதுநலன் கருதி மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**பொருள் எண் : 8**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி – நெடுஞ்சாலை துறையின் மூலம் சாலை விரிவாக்க பணிகள் முடிவடையும் வரையில் குடிநீர் விநியோக பைப்லைன் அமைத்தல் பணியினை உடன் மேற்கொள்ள இயலாத சூழல் உள்ளதால் தனியார் டிராக்டர் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்திட வார்டு எண் – 12,13,14,15,16 மற்றும் 17 குடிநீர் விநியோகம் செய்ய விதி –15 ன் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்த நிலையில் தற்போது நிலவிவரும் வறட்சியின் காரணமாகவும், கூடுதல் குடிநீர் தேவையின் காரணமாகவும் கூடுதலாக 3, 4, 18, 25, 26 மற்றும் 28 வார்டுகளுக்கும் மேலும் ஏற்கனவே வழங்கிவரும் 12 மற்றும் 14வது வார்டுகளையும் சேர்த்து கூடுதலாக ஒரு வாகனம் ஏற்கனவே குடிநீர் விநியோகம் செய்து வரும் திருவா. ஓம் சக்தி எண்டர்பிரைஸ் அவர்களுக்கு வழங்கிய விலை விகிதத்திலேயே அமைத்து குடிநீர் தேவையினை சமாளிக்க ஆகும் தோராய செலவினம் ரூ.5.00 /இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு:** பணியின் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.33**

குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் ஒப்புதல் வழங்கப்படுகிறது.

**பொருள் எண் : 9**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் கொரோனா தடுப்பு நடவடிக்கையின் முன்னெச்சரிக்கை பணிகள் மற்றும் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு பணிகள், தனியார் மூலம் ஆட்கள் வெளிக்கொணர்வு தூய்மை பணியாளர் பொது நலன் கருதி துரித வேகத்தில் நடைபெற்று வருகின்றது. இந்நிலையில் மேற்காணும் பொது சுகாதார பணிகளுக்குண்டான ஒப்பந்தப்பணிகள் மார்ச்–31–2022ல் முடிவடைந்து தூய்மைப்பணியின் தொடர் அவசியம் கருதியும், தற்போது முடிவடைந்துள்ள நகர்புற உள்ளாட்சி தேர்தல் மன்ற கூட்டம் தற்போது நடைபெறும் நிலையில் குறுகிய காலத்தில் ஒப்பந்த புள்ளி கோர இயலாத நிலையில் கீழ்கண்டுள்ள பணிகளுக்கு பணியின் அவசியம் கருதி இந்நகரமன்ற தீர்மான எண்: 16 நாள் : 31.03.2022–ல் ஏற்கனவே பணி மேற்கொண்டு வரும் ஒப்பந்தங்களுக்கு அதே விலை விகிதத்தில் மன்றம் ஏப்ரல் – 2022 க்கு மட்டும் ஏற்ப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில் புதிய ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத சூழல் உள்ள காரணத்தினால் கீழ்க்கண்டுள்ள பராமரிப்பு பணிகளுக்கு மே–2022 மாதத்திற்கு பணி நீட்டிப்பு செய்து நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | பணி நீட்டிப்பு காலம் |
|---|---|---|---|
| 01 | திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பழைய வார்டு எண்.01 முதல் 12 வரையிலான வீடுகளில் வீடுவீடாக மக்கும் குப்பை , மக்காத குப்பை தரம்பிரித்து வாங்குதல் பணி செய்தல் | DUDS Pvt.Ltd | ஒரு மாதகாலம் (மே–2022) |
| 02 | திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பழைய வார்டு எண்.13 முதல் 18 வரையிலான வீடுகளில், வீடு வீடாக மக்கும் குப்பை, மக்காத குப்பை தரம் பிரித்து வாங்குதல், எருவாக்குதல் பணி செய்தல் | Green City Social Service Society | ஒரு மாதகாலம் (மே–2022) |
| 03 | Out Sourcing of 55 Nos of Non power for Dengu Breathing control Activities for 30 day at Nandivaram-Guduvancheri Municipality | Bluee Gold Solutions | ஒரு மாதகாலம் (மே–2022) |
| 04 | Outsourcing of 41-Nos of Non Power for Computer Operation, Office Assistant, Driver, Street Light Maintenance, Water Supply Maintenance and Cleanliness work for 30- days at Nandivaram-Guduvancheri Municipality. | Bluee Gold Solutions | ஒரு மாதகாலம் (மே–2022) |
| 05 | ஆண்டு ஒப்பந்தம்–நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி –2021–22 ஆம் ஆண்டிற்கு குடிநீர் விநியோக பிரிவில் ஏற்படும் பழுதுகள் மோட்டார், சிறு மின் விசை பம்பு உடைப்புகள், கை பம்புகள் வார்டு எண்.10 முதல் 18 வரை பழுது பார்த்தல் பணிக்கு ஆண்டு ஒப்பந்தபடி மேற்கொள்ளுதல். | M/s. குமரன் எலக்ட்ரிகல்ஸ் | ஒரு மாதகாலம் (மே–2022) |
| 06 | ஆண்டு ஒப்பந்தம் – நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி – 2021–22ஆம் ஆண்டிற்கு குடிநீர் விநியோக பிரிவில் ஏற்படும் பழுதுகள், மோட்டார், சிறு மின் விசை பம்பு உடைப்புகள், கை பம்புகள் வார்டு எண்.01 முதல் 09 வரை பழுது பார்த்தல் பணிக்கு ஆண்டு ஒப்பந்தப் பணி மேற்கொள்ளுதல் | திரு.L. புன்னியகோட்டி | ஒரு மாதகாலம் (மே–2022) |

| | | | |
|---|---|---|---|
| 07 | ஜே சி பி வாகனம் வாடகை அடிப்படையில் சப்ளை செய்தல் பணி (வாடகை, டீசல், ஆயில், டிரைவர் பேட்டா உட்பட ஒரு நடைக்கு) | ஓம் சக்தி எண்டர்பிரைசஸ் | ஒரு மாதகாலம் (மே–2022) |
| 08 | திடக்கழிவுகள் அகற்றுவதற்க்காக டிப்பர் லாரிகள் சப்ளை செய்தல் பணி (வாடகை, டீசல், ஆயில், டிரைவர் பேட்டா உட்பட ஒரு நடைக்கு) | ஓம் சக்தி எண்டர்பிரைசஸ் | ஒரு மாதகாலம் (மே–2022) |
| 09 | நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளுக்கு மட்டும் தினசரி 6000 லிட்டர் கொள்ளவு கொண்ட டிராக்டர் வாயிலாக குடிநீர் வழங்குதல் | ஓம் சக்தி எண்டர்பிரைசஸ் | ஒரு மாதகாலம் (மே–2022) |
| 10 | குப்பை வடிகால் கழிவு மண் அகற்றுதல் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கான வாடகை டிராக்டர் பணிக்கு | T.Sundaram Tractor | ஒரு மாதகாலம் (மே–2022) |
| 11 | நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி ஆணையர் பயன்பாட்டிற்கு என தனியாக அரசு வாகனம் இல்லாததால் செங்கல்பட்டு வட்டார போக்குவரத்து அலுவலர் அவர்கள் நிர்னயம் செய்த வாடகை வாகன விலை விகித அடிப்படையில் வழங்கப்பட்ட வாடகை வாகன ஒப்பந்தம் நீட்டிப்பு செய்தல். | Laki Enterprises | ஒரு மாதகாலம் (மே–2022) |

அலுவலக குறிப்பு –

வரிசை எண் 01 முதல் 11 வரையிலான பணி நீட்டிப்பு ஒரு (1) மாதம் காலம் வரை நீட்டிப்பு செய்து மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது. மேலும் இப்பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி விரைவாக அறிவிப்பு செய்து நடவடிக்கை மேற்கொள்ள நிர்வாகத்திற்கு அறிவுரை வழங்கப்படுகிறது. மேலும் இதற்க்காகும் செலவினத்தை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைத்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி இத்தீர்மானம் கோரி மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**தீர்மானம் எண்.34**

மே–2022 மாதத்திற்கு பராமரிப்பு பணி நீட்டிப்பு செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.

பொருள் எண். 10

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி – பொதுநிதி பணிகள் – இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 30 வரையுள்ள பகுதிகளில் தெரு மின்விளக்கு பணிகள் மேற்கொள்ள பணிகளின் விவரங்கள் கீழ்க்கண்டுள்ளவாறு அட்டவணைப்படுத்தப்படுகிறது.

| வ. எண். | பணியின் விவரம் | தோராக தொகை ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | 1,2 மற்றும் 3ம் வார்டுகளுக்கு எல்.இ.டி தெரு விளக்கு விநியோகித்தல் | 9.90 |
| 2 | 4,5 மற்றும் 6ம் வார்டுகளுக்கு எல்.இ.டி தெரு விளக்கு விநியோகித்தல் | 9.90 |
| 3 | 7,8 மற்றும் 9ம் வார்டுகளுக்கு எல்.இ.டி தெரு விளக்கு விநியோகித்தல் | 9.90 |
| 4 | 10,11 மற்றும் 12ம் வார்டுகளுக்கு எல்.இ.டி தெரு விளக்கு விநியோகித்தல் | 9.90 |
| 5 | 13,14 மற்றும் 15ம் வார்டுகளுக்கு எல்.இ.டி தெரு விளக்கு விநியோகித்தல் | 9.90 |
| 6 | 16,17 மற்றும் 18ம் வார்டுகளுக்கு எல்.இ.டி தெரு விளக்கு விநியோகித்தல் | 9.90 |
| 7 | 19,20 மற்றும் 21ம் வார்டுகளுக்கு எல்.இ.டி தெரு விளக்கு விநியோகித்தல் | 9.90 |
| 8 | 22,23 மற்றும் 24ம் வார்டுகளுக்கு எல்.இ.டி தெரு விளக்கு விநியோகித்தல் | 9.90 |
| 9 | 25,26 மற்றும் 27ம் வார்டுகளுக்கு எல்.இ.டி தெரு விளக்கு விநியோகித்தல் | 9.90 |
| 10 | 28,29 மற்றும் 30ம் வார்டுகளுக்கு எல்.இ.டி தெரு விளக்கு விநியோகித்தல் | 9.90 |

பொது நலன் கருதி மேற்க்கண்ட வ.எண்.01 முதல் 10 வரையுள்ள தெருமின் விளக்கு பணிகள் பொது நிதியில் மேற்கொள்ளவும், ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.35**

ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

பொருள் எண். 11

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சியானது 8.50/சதுர கிலோ மீட்டர் கொண்ட சென்னைக்கு அருகாமையில் உள்ள வளர்ந்து வரும் ஓர் நகரமாக உள்ளது. இதன் மக்கள் தொகை 2011–ன் கணக்கெடுப்பின் படி 44,098/எண்ணிக்கையாகும் தற்போது இதன் மக்கள் தொகை சுமார் 65,000/எண்ணிக்கைக்கு மேல் உள்ளதாலும் தினந்தோறும் வெளிப்பகுதிகளிலிருந்து அதிக மக்கள் வந்து செல்லும் மையப்பகுதியாக இருப்பதால் பொது மக்களின் குடிநீர் தேவை மிக முக்கிய பங்காற்றும் விதமாக உள்ளது.

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடியிருப்புகளுக்கும், பொது மக்களுக்கும் குடிநீர் டேங்கர் லாரி மூலம் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்ய ஏற்கனவே 2 எண்ணிக்கையில் டேங்கர் லாரியின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டது. இந்நிலையில் தற்போது நிலவி

வரும் கோடை வரட்சியின் காரணமாக இந்நகரமன்ற தீர்மான எண். 19 நாள்: 31.03.2022 நிர்வாக அனுமதியில் 5– எண்ணிக்கையிலான கூடுதல் வாகனம் அமைத்து குடிநீர் தேவையினை பூர்த்தி செய்திட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக 5 எண்ணிக்கையிலான குடிநீர் டேங்கர் வாடகையில் அமர்த்தி பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோர நிர்வாக காரணங்களில் இயலாத சூழல் உள்ளதால் மே–2022 மாதத்திற்கு மட்டும் ஏற்கனவே குடிநீர் டேங்கர் லாரி மூலம் விநியோகம் செய்து வரும் திருவா. ஓம் சக்தி எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் மூலம் ஏற்க்கனவே வழங்கி வரும் விலை விகிதத்திலேயே பட்டியல் வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.36**

கூடுதல் வாகனம் அமைத்து குடிநீர் மே–2022 மாதத்திற்கு வழங்கிட மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**பொருள் எண். 12**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி – குடிநீர் பிரிவு – இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு பகுதிகளில் தற்போது நிலவி வரும் கோடைவறட்சி காரணமாக குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டு பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் வழங்க இயலாத சூழல் உள்ளது. இதனை சமாளிக்கும் பொருட்டு வார்டு பொதுமக்களுக்கு தனியார் டேங்கர் லாரி வாகனங்களை கொண்டு குடிநீர் விநியோகம் செய்திட இந்நகரமன்ற தீர்மான எண்.19 – நாள்.31.03.2022–ல் 5 எண்ணிக்கையிலான கூடுதல் குடிநீர் டேங்கர் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்திட நகர மன்றம் அனுமதிக்கப்பட்டுள்ளதால் தலா ஒரு வாகனத்திற்கு 7.00 / இலட்சம் என தனித்தனியே வாகனங்களை கொண்டு பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.37**

குடிநீர் பணியின் அவசியம் கருதி 5 எண்ணிக்கையிலான குடிநீர் வாகனம் தலா 7.00 லட்சம் என ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

ஓம்/ M.K.D. கார்த்திக்
நகர்மன்ற தலைவர்
நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி